# யூலை – 23 – திங்கள்

## புனித பிரிஜித்

## இங்கிருப்பவர் யோனாவைவிட பெரியவர் அல்லவா (மத்12:41)

**முதல் வாசகம் : மீக்கா6 : 1 – 4, 6 – 8**

ஆண்டவர் கூறுவதைக் கேளுங்கள் நீ எழுந்து, மலைகளுக்கு முன்னிலையில் உன்வழக்கைச்சொல் குன்றுகள் உன்குரல் ஒலியைக் கேட்கட்டும்.மலைகளே, மண்ணுலகின் நிலையான அடித்தளங்களே, ஆண்டவரின் வழக்கைக்கேளுங்கள் ஆண்டவருக்குத் தம்மக்களோடு வழக்கு ஒன்று உண்டு. இஸ்ரயேலோடு அவர் வாதாடப்போகின்றார். என்மக்களே, நான் உங்களுக்கு என்னசெய்தேன்? எதில் நான் உங்களைத் துயரடையச் செய்தேன்? எனக்கு மறுமொழிகூறுங்கள்.நான் உங்களை எகிப்து நாட்டிலிருந்து அழைத்துவந்தேன் அடிமைத்தன வீட்டிலிருந்து மீட்டுவந்தேன் உங்களுக்கு முன்பாக மோசேயையும், ஆரோனையும், மிரியாமையும் அனுப்பிவைத்தேன். ஆண்டவரின் திருமுன்வரும்போது உன்னதரான கடவுளாகிய அவருக்கு எதைக் கொண்டுவந்து பணிந்துநிற்பேன்? எரிபலிகளோடும் ஒருவயதுக் கன்றுகளோடும் அவர்முன்னிலையில் வரவேண்டுமா? ஆயிரக்கணக்கான ஆட்டுக்கிடாய்கள் மேலும் பல்லாயிரக் கணக்கான ஆறுகளாய்ப் பெருக்கெடுத்தோடும் எண்ணெய் மேலும் ஆண்டவர் விருப்பம்கொள்வாரோ? என்குற்றத்தை அகற்ற என் தலைப்பிள்ளையையும், என் பாவத்தைப்போக்க நான் பெற்றகுழந்தையையும் பலிகொடுக்க வேண்டுமா?ஓ மானிடா, நல்லது எது என அவர் உனக்குக் காட்டியிருக்கின்றாரே! நேர்மையைக் கடைப்பிடித்தலையும், இரக்கம் கொள்வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாக தாழ்ச்சியோடு நடந்து கொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்?

**பதில்பாடல் :** தம் வழியைச் செம்மைப் படுத்துவோர் கடவுள்
தரும் மீட்பைக் கண்டடைவர்.

**நற்செய்தி : மத்தேயு 12 : 38 – 42**

அக்காலத்தில் மறைநூல் அறிஞர் சிலரும் பரிசேயர் சிலரும் இயேசுவுக்கு மறுமொழியாக, ”போதகரே, நீர் அடையாளம் ஒன்று காட்ட வேண்டும் என விரும்புகிறோம்” என்றனர். அதற்கு அவர் கூறியது ”இந்தத் தீய விபசாரத் தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்கு இறைவாக்கினரான யோனாவின் அடையாளத்தைத் தவிர வேறு அடையாளம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது. யோனா மூன்றுபகலும் மூன்று இரவும் ஒரு பெரியமீனின் வயிற்றில் இருந்தார். அவ்வாறே மானிடமகனும் மூன்றுபகலும் மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார். தீர்ப்பு நாளில் நினிவே மக்கள் இத்தலைமுறையினரோடு எழுந்து, இவர்களைக் கண்டனம் செய்வார்கள். ஏனெனில் யோனா அறிவித்த செய்தியைக்கேட்டு அவர்கள் மனம்மாறியவர்கள். ஆனால், இங்கிருப்பவர் யோனாவைவிடப் பெரியவர் அல்லவா! தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம்செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக்கேட்க உலகின் கடைக் கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவர் அல்லவா!“ என்றார்.

**தியானம்:** இன்று மக்கள் கூட்டம் அற்புதங்களுக்கும் அடையாளங்களுக்கும் பின்னால் ஓடிக்கொண்டிருக்கின்றது. இயேசு சுகம் தருகின்றார், இயேசு விடுதலை தருகின்றார் என்று இயேசுவை ஏலம் போட்டு விற்கும் கூட்டம் பெருகிய காலகட்டத்தில் நாமும் இயேசுவிடமிருந்து எதையாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் ஆலயத்திற்குச் சென்று வருகின்றோம். தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிடச் சிறந்த அன்பு யாரிடமும் இல்லை (யோவா.15:13) என்று சொல்லி நான் ஆடுகள் வாழ்வு பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு இந்த உலகத்திற்கு வந்தேன் (யோவா.10:10) என்று தன்னுடைய உடலையும் இரத்தத்தையும் சிலுவையிலே தியாகம் செய்து நமக்கு நிறைவாழ்வு வழங்கிய தேவனுக்காக நம்முடைய வாழ்வை அர்ப்பணிக்காமல் இன்னும் நம்மை முன்னிலைப்படுத்தி வாழும் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். “மதிநுட்பம் உள்ளவர் ஒருவருமில்லை, கடவுளைத் தேடுகிறவர் எவராவது உண்டா? எல்லாரும் நெறிபிறழ்ந்தனர் ஒருமிக்க கெட்டுப்போயினர். அவர்களது மனக்கண்களில் இறையச்சம் இல்லை” (உரோ 2:11-18). இன்று உண்மையாக கடவுளைத் தேடுகின்ற மனிதர்கள் யாரவது இருக்கிறார்களா என்று கடவுள் வாஞ்சையோடு தேடிக்கொண்டிருக்கின்றார். நாம் கடவுளை எதற்காக தேடிக் கொண்டிருக்கின்றோம்? இயேசு என்னுடைய வாழ்க்கைக்கு எதற்காகத் தேவை? இந்த இயேசுவை அறிந்த நான் என்ன செய்து கொண்டிருக்கின்றேன்? என்ற கேள்விகளை நமக்குள் கேட்டுக் கொள்வோம். இந்த சின்ன வாழ்க்கயை வாழ்ந்து முடிப்பதற்காகவே நாம் இயேசுவைத் தேடிக்கொண்டிருக்கின்றோம். நம்முடைய கடன் பிரச்சனைகளும், குடும்பத்தின் தேவைகளையும், நமது வேதனைகளையும், துன்பங்களையும், நோய்களையும் நீக்குவதற்காகவா நம்முடைய தேவன் இந்த உலகிற்கு வந்து சிலுவை சுமந்து நம்மை மீட்டார்? நாமும் பரிசேயரைப்போல இன்று இயேசுவை சோதித்துக் கொண்டிருக்கின்றோம். நம்முடைய மீட்பு, மகிழ்ச்சி, மகிமை எல்லாம் என் இயேசுதான் என்று நாம் எப்போது உணர்கின்றோமோ? அப்போதுதான் நாம் சரியான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று அர்த்தம். நம்மை சாவின் பிடியிலிருந்தும், சாத்தானின் பிடியிலிருந்தும், பாதாளத்தின் பிடியிலிருந்தும் பாவ சாபத்தின் பிடியிலிருந்தும் மீட்ட என் இயேசு என்னோடு இருக்கிறவரையில் எனக்கு எந்த துன்பமும் இல்லை. ஏனெனில் உலகத்தில் இருக்கும் எல்லாப் பிரச்சனைகளைவிட, துன்பங்களைவிட, சாத்தானை சோதனைகளைவிட எனக்குள் வாழும் தேவன் மிகப்பெரியவர். (1 யோவா 4:4) அந்த தேவன் என்னோடு இருக்கிற வரையில் எனக்கு எந்நாளும் அற்புதங்களும் அதியசயங்களும் வாழ்க்கை நிகழ்வுகளாக மாறிப்போகும்.